Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 17, 2023

திங்கட்கிழமை ஜூலை 17, 2023 | ஒளி: 09 கதிர்: 041 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## எதிர் நிலைப்படுத்தும் அரசியலால்

# தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காது

**சிங்கள தேசத்துக்கு எதிராக தமிழ் மக்களை சிந்திக்கத் தூண்டியதே, தமிழ் மக்களின் அரசியல் வரலாறு**

**'அனைத்து இன மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க இணைந்து பயணிப்போம்' என்பதாக உச்சரிக்க வேண்டும்**




*சுப்பிரமணியம் பாஸ்கரன்*

சக இனங்களை எதிர்நிலைப்படுத்தும் அரசியலால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை என்று கடற்றொழில் அமைச்சரும் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஏ32 பிரதான வீதியில் பல்லவராயன் கட்டு, வேரவில் வரையான வீதி புனரமைப்புக்காக ஞாயிற்றுக்கிழமை (16) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "தமது பல்வேறு தேவைகளுக்காக இவ்வீதியை நாளாந்தம் பயன்படுத்தும் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி மக்களின் தேவைகளை இனங்காணவும் அவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்குமாக பல தடவைகள் நான் மேற்கொண்ட பயணங்களில் இந்த வீதியை புனரமைப்பதற்கான வேண்டுதல்களே பிரதானமாக முன்வைக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2

## ஒன்லைனில் 30 ஆயிரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம்




கடந்த ஒரு மாதத்தில் ஒன்லைன் கடவுச்சீட்டு முறைமை மூலம் 29,578 பேர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள 51 பிரதேச செயலகங்களில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவைக்கு 24 ஆயிரத்து 285 பேர் சாதாரண முறைமையின் கீழும் ஒரு நாள் சேவையின் மூலம் 5 ஆயிரத்து 294 பேர் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவத்தார்.

தொடர்ச்சி P2

### இலங்கைக்கு வருகிறார்

## சீன கம்யூனிஸ்ட் உறுப்பினர்



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சோங்கிங் மாநகரக் குழுவின் செயலாளருமான யுவான் ஜியாஜுன், புதன்கிழமை (19) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' விவகாரம்

## சட்டமா அதிபர் தலைமையில் சிங்கப்பூர் செல்கிறது குழு



'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கான இணக்கப்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழு இன்றையதினம் (17) சிங்கப்பூருக்கு பயணமாகவுள்ளது.

சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் தலைமையில் பயணிக்கவுள்ள குழு, எதிர்வரும் செவ்வாய் (18) மற்றும் புதன்கிழமைகளில் (19) பேச்சுவார்த்தையை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### மலையகத் தமிழர்கள் தம்மை

## 'இந்திய வம்சாவளி' என்றே அடையாளப்படுத்த வேண்டும்



மலையகத் தமிழர்கள் தமக்கான இன அடையாளத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது, எனவே, சனத்தொகை கணக்கெடுப்பின்போது தம்மை 'இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள்' என்றே அடையாளப்படுத்த வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### இந்த வாரம் கையளிக்க ஏற்பாடு

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை இந்த வாரம் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணைக்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் ஆதரவை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும்ம பண்டார மற்றும் உதவி செயலாளர், டொக்டர் காவிந்த ஜயவர்தன ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### மருந்து ஒவ்வாமையால் நோயாளிகள் பாதிப்பு

## மருந்து தொகுதிகள் தற்காலிகமாக நீக்கம்



சர்ச்சைக்குரிய மருந்துகளால் கடுமையான ஒவ்வாமை உருவாக்கிய நோயாளிகள் கண்டி, பேராதனை, அநுராதபுரம் வைத்தியசாலைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் டொக்டர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதேவேளை, நுண்ணுயிர் கொல்லி மருந்தின் 3 தொகுதிகளை தற்காலிகமாக பாவனையிலிருந்து நீக்கியுள்ளதாகவும் மருந்து தொகுதியை வழங்கியதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்த யுவதிக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி தொகுதி மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலையில் இரு நோயாளர்களுக்கு

தொடர்ச்சி P2

## நாட்டிலுள்ள மருந்துகள் குறித்து வெளிப்படை தன்மை அவசியம்



மக்களுக்கு மருந்துகளை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதை சுகாதார அமைச்சு உறுதிசெய்ய வேண்டுமெனவும், நாட்டில் உள்ள அனைத்து மருந்து வகைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை அவசியம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## மாணவியை தாக்கிய அதிபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 9 வயதான மாணவியை தாக்கிய குற்றச்சாட்டில் குறித்த பாடசாலை அதிபரை ஊர்காவற்துறை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (16) கைதுசெய்தனர்.

மாணவியை பாடசாலையில் வைத்து அதிபர் கடுமையாக தாக்கியதில் மாணவியின் உடலில் தழும்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.இந்நிலையில், மாணவி தாக்கப்பட்டமை குறித்து மனித

தொடர்ச்சி P2



## திகிலிவெட்டை – சந்திவெளி படகு பாதை சேவை ஆரம்பம்

கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட திகிலிவெட்டை - சந்திவெளி படகுப்பாதை சேவை 20 இலட்சம் ரூபாய் செலவில் செப்பனிடப்பட்டு சனிக்கிழமை (15) முதல் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட திகிலிவெட்டை, குடும்பிமலை, பேரில்லாவெளி, கோறாவெளி, பொண்டுகள்சேனை, அக்குரானை,

தொடர்ச்சி P2

## சரியாக திட்டமிட்டு முன்னெடுக்க வேண்டும்

*சுப்பிரமணியம் பாஸ்கரன்*



நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திகள் சரியாக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேசத்துக்கான பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வெள்ளிக்கிழமை (14) நடைபெற்ற போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், நெடுந்தீவில் சுற்றுலாத்துறையும் மீன்பிடியும் மிகப் பிரதானமாக காணப்படுகின்றன.

இவை இரண்டினையும் சரியாக திட்டமிடாத வரை எந்த முன்னேற்றத்தையும் காண முடியாது.

தொடர்ச்சி P2

### அரகலய ஆர்ப்பாட்டம் குறித்த

## சர்வதேச சதி திட்டங்களை அம்பலப்படுத்துவோம்

### விசாரணை மேற்கொள்ளுமாறு விமல் கோரிக்கை



கடந்த வருடம் இடம்பெற்ற அரகலய ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய சர்வதேச சதிகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, சர்வதேச சதித்திட்டங்கள் குறித்து மேலும் தகவல்களை வெளியிடப்போவதாக எச்சரித்துள்ளார்.

சதித் திட்டம் குறித்து மேலும் பல தகவல்களை அம்பலப்படுத்திய பின்னர் சதித் திட்டம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதியை கோருவதற்காக நாங்கள் அவரை சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பட்டாணிச்சூரில் குழு மோதல்: ஒருவர் கவலைக்கிடம் 4 பேர் காயம்

*க. அகரன்*

வவுனியாவில் இரு இன இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள மோட்டர் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றின் முன்பாக குறித்த மோதல் சம்பவம் சனிக்கிழமை (15) இரவு இடம்பெற்றது. குறித்த பகுதியில் இடம்பெற்ற இரு இன இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலின் போது குறித்த பகுதியில் பயணித்த கார் ஒன்று வழிமறிக்கப்பட்டு தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் வவுனியா, யாழ் ஐஸ்கிறீம் வீதியில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

அமைச்சர் ரம்புக்வெல்ல மருந்துகளை கொள்வனவு செய்தமை மற்றும் முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக பல விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார் என்றும் மருத்துவ அலட்சியத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டவுடன் சபையின் அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவியை தாக்கிய அதிபர் கைதானார்

உரிமை ஆணைக்குழு பொலிஸாரிடம் வினாவியபோது, தாம் அதிபரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அதிபரை திங்கட்கிழமை (17) முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பிலான உத்தியோகபூர்வ விசாரணைகளை திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டாணிச்சூரில் குழு மோதல்: ஒருவர் கவலைக்கிடம் 4 பேர் காயம்

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்தவரின் சகோதர் மீதும் குறித்த குழு வவுனியா வைத்தியசாலையில் வைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இதனையடுத்து வைத்திய வைத்தியசாலையில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், வைத்தியசாலை முன்பாகவும் இரு இன இளைஞர் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் இடம்பெற்ற பட்டாணிச்சூர் பகுதிக்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கும் குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வேறு இளைஞர்களால் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சரியாக திட்டமிட்டு முன்னெடுக்க வேண்டும்

அதாவது நெடுந்தீவைச் சூழவுள்ள கடல் வளங்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களாலும் உள்ளூர் இழுவைபபடகுகளாலும் நாளாந்தம் அழிக்கப்படுகின்றன.

உள்ளூர் இழுவைப் படகுளை கூட கடற்படையினரால் தடுக்க முடியவில்லை; கடற்றொழில் அமைச்சராலும் முடியவில்லை. இவ்வாறான நிலையில் இந்தப்பிரதேச கடற் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து, பெரும் நெருக்கடி நிலைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேபோல நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலா துறையை சரியான முறையில் திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

நெடுந்தீவு பிரதேச சபையால் இந்தச் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு போதிய நிதி நிலைமைகளில்லை. குறிப்பாக மத்திய அரசே சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தற்போது நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் வடதாரகை படகு மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இதில் கடமையின் நிமிர்த்தம் வருகைதரும் அரச உத்தியோகத்தர்கள் பல்வேறு தேவைகருதி செல்லும் பொதுமக்கள் எனப்பலரும் சென்று வருகின்றனர். இவர்களோடு சுற்றுலாப் பயணிகளும் பயணிக்கின்றனர்.

சுற்றுலாத்துறையை நம்பி பெரும்பாலான குடும்பங்கள் உள்ளன. தங்களுடைய வாழ்வாதாரங்களை முன்னெடுக்கும் வகையிலே ஏராளமானவர்கள் பல்வேறு முதலீடுகளை செய்திருக்கின்றார்கள்.

இந்தச் சுற்றுலாத்துறை சரியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதன் மூலம் இந்தப் பிரதேச மக்களினுடைய வாழ்வாதாரம், தொழில் வாய்ப்பு என்பன சிறந்த முறையிலே அமையும் என்றார்.

# தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காது

மாற்று தரப்பினர் இவ்வீதி புனரமைப்பை அரசு தரப்பு கவனம் செலுத்தாதிருப்பதாக கூறி இதற்காக நான் மேற்கொண்ட முயற்சிகளையும் இனத்துவ நிலைப்பட்டு மக்களை சிந்திக்கத் தூண்டி கையில் கிடைத்ததையும் தட்டி வீழ்த்தும் அரசியலை தொடர்ந்தார்களே தவிர எனது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பவர்களாக எந்த தமிழ் தலைவர்களும் முன்வரவில்லை.

எதையாவது மக்களுக்கு கிடைக்கச்செய்து அதனை தமக்கு வாக்காக மாற்றுவதற்கு பதில் எதுவும் தமிழ் மக்களுக்கு கிடைக்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் அதனை சிங்கள தேசத்துக்கெதிராக தமிழ் மக்களை சிந்திக்க தூண்டி, தமது வாக்கு வங்கியை பாதுகாக்க முயன்றமையே தமிழ் மக்களின் அரசியல் வரலாறாக இன்று வரை தொடர்கிறது.

இது மக்களின் மனங்களில் வெறுப்பையும் விரக்தியையும் தூண்டி சக இனங்கள் நாட்டில் இருக்கும் வரை தமிழ் மக்களின் வாழ்வில் விடிவு ஏற்படாது என்கிற சுலோகத்தையே யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இந்த 14 ஆண்டு காலத்தின் பின்பும் வலிந்து திணிக்க முற்படுகிறார்கள்.

இந்த சுலோகத்தை தமிழ் தேசத்தின் தலைவர்கள் அனைத்து இன மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க இணைந்து பயணிப்போம் என்பதாக மாற்றி உச்சரிக்காமல் எமது மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப்போவ தில்லை என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

## திகிலிவெட்டை – சந்திவெளி படகு பாதை சேவை ஆரம்பம்

முறுத்தானை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களும் ஏறாவூர் பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஈரளக்குளம் கிராமத்தினை சேர்ந்த மக்களும் 2010 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியினை அடைந்து தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குமாக சந்திவெளி ஆற்றினை சுற்றி பல மைல் தூரம் பயணம் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

நான் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் எனது சிபாரிசின் மூலம் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தினை துரிதப்படுத்தும் முகமாக வெருகல் மற்றும் கிண்ணியா பாலங்கள் உள்ளடங்கலாக 9 பாலங்களை அமைத்திருந்தோம் என்று கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், அப்போது வெருகல் ஆற்றினை கடப்பதற்கு பயன்படுத்திய

> **வெருகல் ஆற்றினை கடப்பதற்கு பயன்படுத்திய படகு பாதையினை 11 இலட்சம் ரூபாய் கட்சி நிதியினை பயன்படுத்தி கனரக வாகனம் மூலம் சந்திவெளி ஆற்றிற்கு கொண்டு சென்று திருத்தம் செய்து மக்கள் பாவனைக்காக கையளித்திருந்தோம்**

படகு பாதையினை 11 இலட்சம் ரூபாய் கட்சி நிதியினை பயன்படுத்தி கனரக வாகனம் மூலம் சந்திவெளி ஆற்றிற்கு கொண்டு சென்று திருத்தம் செய்து மக்கள் பாவனைக்காக கையளித்திருந்தோம்.

அதன் காரணமாக ஆற்றிற்கு அப்பால் வசித்து வந்த மேற்குறித்த பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தமது போக்குவரத்தினை நேரவிரயமின்றி விரைவாகவும் சுமூகமாகவும் முன்னெடுத்துவந்திருந்தனர்.

எனினும் தற்போது 12 ஆண்டுகள் கடந்த நிலையில் குறித்த பாதை 3 வது தடவையாக பழுதடைந்த நிலையில், கோறளைப்பற்று பிரதேச சபை நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாய் செலவில் குறித்த படகு பாதையினை சீர் செய்து திருதியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டிலுள்ள மருந்துகள் குறித்து வெளிப்படை தன்மை அவசியம்

சுகாதார அமைச்சால் நிர்வகிக்கப்படும் விசேட இணையத்தளம் மூலம் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள மருந்துகளின் அளவு மற்றும் நாளாந்தம் பெற்றுக்கொள்ளும் மொத்த மருந்துத் தொகை குறித்த தரவுகளை வழங்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த வலையமைப்பு செயற்பாட்டின் ஊடாக வைத்தியசாலைகளுக்கு இடையில் மருந்துகளை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரத்துறை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை சட்டத்தின் திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் இதன்போது ஜனாதிபதி சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தற்போதுள்ள நடைமுறையின் கீழ் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளுக்கான இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் மறு-அங்கீகார செயல்முறையை துரிதப்படுத்துமாறு சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் செயல்முறை மூலம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக நேரடியாக கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## மருந்து தொகுதிகள் தற்காலிகமாக நீக்கம்

ஒவ்வாமையை ஏற்படுத்திய தடுப்பூசி தொகுதி ஆகியனவே இவ்வாறு பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் ஒவ்வாமைக்குள்ளான நோயாளிகளின் நிலை கவலைக்கிடமாக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுண்ணுயிர் கொல்லி மருந்தினை செலுத்தியதன் பின்னர் ஏற்பட்ட ஒவ்வாமை அதிகரித்ததன் காரணமாக பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 21 வயதான சமோதி சந்தீபனி என்ற யுவதி உயிரிழந்துள்ளதாக குறித்த அதிகாரி தெரிவித்தார்.

## ஒன்லைனில் 30 ஆயிரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம்

பிரதேச செயலகங்கள் மூலம் ஒன்லைன் ஊடாக கடவுச்சீட்டு வழங்கும் வேலைத்திட்டம் கடந்த ஜூன் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த முறைமையால் பத்தரமுல்லையிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலும் நீண்ட வரிசைகள் இல்லாமல் போயுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

## 'இந்திய வம்சாவளி' என்றே அடையாளப்படுத்த வேண்டும்

இது தொடர்பான பிரசாரத்தை - தெளிவுபடுத்தலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் நலன் கருதி பொகவந்தலாவ டின்சின் தோட்டப் பகுதிகளில் நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் சனிக்கிழமை (15) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இவ்வருடம் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இறுதியாக நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்போது மலையக தமிழர்கள் பலர், இலங்கை தமிழர்கள் என்பதற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதனால் மலையக தமிழர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது. சுமார் 8 லட்சத்து 50 ஆயிரம் பேரே பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல கணக்கெடுப்புக்கு வரும் சில அதிகாரிகளும், தோட்டத்தில் வாழ்பவர்கள்தான் இந்திய தமிழர்கள், நகரத்தில் வாழ்பவர்கள் இலங்கை தமிழர்கள் என எண்ணிக்கொண்டு கணக்கெடுப்பு நடத்துகின்றனர்.

மேலும் சிலர் தமிழில் பேசினால் அவர்கள் இலங்கை தமிழர்கள் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இம்முறை இவ்வாறான தவறுகளுக்கு இடமளிக்க கூடாது. எனவே, மலையக தமிழர்கள் தம்மை மலையக தமிழர்களாகவே கணக்கெடுப்புக்குள் உள்ளடக்க வேண்டும். அப்போதுதான் எமது இனத்தின் இருப்பு பாதுகாக்கப்படும்.

மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை இளைஞர்கள் ஏற்படுத்த வேண்டும். இது காங்கிரஸுக்கான கணக்கெடுப்பு அல்ல; மக்களுக்கானது, எனவே, இந்த விடயத்திலும் எவரும் அரசியல் நடத்தக்கூடாது.

அதேவேளை, மலையக அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்றால் அதற்கான நடவடிக்கை அவசியம். மக்களுக்கு சேவை செய்யவே நாம் வந்துள்ளோம். அதற்காகவே மக்கள் வாக்களிக்கின்றனர். சேவை வழங்க வேண்டியது எமது பொறுப்பாகும். எனவே, அரசியல் வாதிகளை கடவுளாக பார்க்கும் நிலை மாற வேண்டும். சமூக நீதி கோட்பாடு முக்கியம்" என்றார்.

## சட்டமா அதிபர் தலைமையில் சிங்கப்பூர் செல்கிறது குழு

> **சட்டமா அதிபர் தலைமையில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு செயலாளர், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், அவுஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் ஆகியோர் அடங்குகின்றனர்**

சிங்கப்பூர் சென்று கப்பல் நிறுவனம் மற்றும் காப்பீட்டு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுபடவுள்ள குறித்த குழு, அதன் பின்னர் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது

சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஆதரவையும் இதற்காக கோரவுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார்.

அமைச்சரவையின் அனுமதியைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட குழுவில் சட்டமா அதிபர் தலைமையில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு செயலாளர், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் மற்றும் அவுஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் ஆகியோர் அடங்குகின்றனர்.

## சீன கம்யூனிஸ்ட் உறுப்பினர்

19 ஆம் திகதி வருகை தரவுள்ள அவர், எதிர்வரும் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, எதிர்வரும் 21 ஆம் திகதி புதுடெல்லி செல்லவுள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு சில நாள்களுக்கு முன்னதாகவே சீன பிரதிநிதி வருகை தரவுள்ளார்.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சதித் திட்டங்களை அம்பலப்படுத்துவோம்

சதித்திட்டம் குறித்த முதல்கட்ட விவரங்களை 'ஒன்பது பேரின் மறைக்கப்பட்ட கதை' என்ற ஏப்ரல் மாதம் வெளியான நூலில் அவர் வெளியிட்டிருந்தார்.

எனினும் புதிய தகவல்கள் குறித்து மேலதிக விவரங்களை அவர் வெளியிட மறுத்துள்ளார். அவற்றை தவறாக அர்த்தப்படுத்தலாம் என்பதால் மேலதிக விவரங்களை வெளியிட விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்காக அந்த விவரங்களை முதலில் ஜனாதிபதியிடம் கையளிக்கவேண்டும் என்றும் தங்களிடம் உள்ள ஆதாரங்களை குழப்ப விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

தனது பிரசுரத்தில் உள்ள விடயங்கள் ஜனாதிபதிக்கு தெரியும் எனவும் லண்டனில் சமீபத்தில் ஆற்றிய உரையில் ஜனாதிபதி தான் தெரிவித்துள்ள விடயங்களை ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

37ஆவது ஆண்டு நினைவுநாள்

# மூதூர் படுகொலை நினைவேந்தல்

■ தீஷான் அஹமட்

மூதூர், பெரியவெளி அகதி முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் 37ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு பாதிக்கப்பட்ட மக்களால் நேற்று (16) மூதூர், மணற்சேனை கிராமத்தில் நினைவுகூரப்பட்டது.

மூதூர், பெரியவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் பாதுகாப்புத்தேடி தஞ்சம் புகுந்திருந்த 44 பொதுமக்கள், ஆயுததாரிகளால் சுட்டும் வெட்டியும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டு இருந்தார்கள். இவர்களின் ஆத்மசாந்தி வேண்டி அப்பகுதி மக்களால் நேற்று நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் கலந்து கொண்டு பிரதான சுடரை ஏற்றி வைத்தார். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு உறவினர்களால் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



## ஏழு வயது சிறுமியை தந்தையும் மாமனாரும் கூட்டாக துஷ்பிரயோகம்

■ கனகராசா சரவணன்

ஏழு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சிறுமியின் தந்தையையும் மாமனாரையும் வெள்ளிக்கிழமை (14) கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமியின் தாயார், மூன்று மாதத்துக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் தந்தையாருடன் வாழ்ந்து வந்த சிறுமியை, 49 வயதுடைய தந்தையாரும் 52 வயதுடைய சிறுமியின் மாமனரும் இணைந்து கூட்டாக, பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுவந்துள்ள நிலையில், இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, இருவரையம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுமியை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் இரத்த தானம்

■ செ.தி பெருமாள்





ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இயங்கும் கிராமோதய சபைகள் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு, மஸ்கெலியா பௌத்த விகாரை மண்டபத்தில் நடைபெற்றது.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், மஸ்கெலியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், மவுஸ்சாக்கலை இராணுவ முகாம் சிப்பாய்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சேகரிக்கபட்ட இரத்தம், நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு கொண்டு செல்லபட்டது. இந்த நிகழ்வில், பேராதனை ஆதார வைத்தியசாலையில் உள்ள சிரேஷ்ட வைத்திய அதிகாரி நில்மிணி லொக்குஹே தலைமையிலான வைத்திய குழு கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருதில் கடலரிப்பால் காவு கொள்ளப்படும் 'பீச் பார்க்'

■ ஏ.எம் அஸ்லம்

சாய்ந்தமருது பிரதேசத்தில் மீண்டும் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பால் கடற்கரைப் பூங்கா கிழக்குப் பகுதி சுற்றுமதில் வீழ்த்தப்பட்டு இருப்பதுடன் மீனவர் நூலக கட்டடமும் ஆபத்தை எதிர்நோக்கி இருக்கிறது.

கடலரிப்பு காரணமாக சனிக்கிழமை (15) இச்சுற்றுமதில் வீழ்ந்திருப்பதுடன் பீச் பார்க்கின் பெரும்பகுதி கடலுக்கு இரையாகக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் வாடிகள் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்படுவதால், வலைகள், மீன்படி உபகரணங்களை பாதுப்பாக வைப்பதற்கும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் படகுகள், தோணிகள் நிறுத்தும் கரையோரப் பரப்புகள் கூட கடல் அலைகளால் காவு கொள்ளப்பட்டிருப்பதால் அவற்றை நிறுத்தி வைப்பதில் பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.



## நபரை அறைக்குள் பூட்டிவிட்டு கொள்ளை

### இராணுவ வீரர் உட்பட மூவர் கைது

■ ராமு தனராஜா

அறையில் நபர் ஒருவரைத் தடுத்து வைத்துவிட்டு பணம், மோட்டார் சைக்கிள், அலைபேசி என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் இராணுவ உத்தியோகத்தர் உட்பட்ட மூவரை கிராந்துருகோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் இருந்து 80,000 ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டு உள்ளதுடன் மோட்டார் சைக்கிள், அலைபேசி என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்டவர்கள் மையங்கனை, கிராந்துருகோட்டை பகுதியை சேர்ந்த 25, 34 வயதுடைய நபர்கள் எனவும் இராணுவ உத்தியோகத்தர் வவுனியா இராணுவ முகாமில் கடமையாற்றும் நபர் எனவும் கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்

பயணப்பையை உரியவரிடம் கையளித்த

## ஓட்டோ சாரதிக்கு பாராட்டு

■ செ. திவாகரன், டி. சந்ரு



இந்தியாவில் இருந்து இலங்கை வந்த சுற்றுலாப் பயணி ஒருவர், ஓட்டோவில் தொலைத்த பயணப்பையை, ஓட்டோ சாரதி தேடிப்போய் உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் நானுஓயாவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஓட்டோவில் நானுஓயாவில் இருந்து நுவரெலியா நோக்கி பயணம் செய்த இந்திய பிரஜை, தனது பயணப்பைத் தவறவிட்டு நுவரெலியாவில் தங்கியிருந்த விடுதிக்கு சென்றுள்ளார். செ. சுகுமாரன் என்ற ஓட்டோ சாரதி நானுஓயாவில் இறங்கி பார்க்கும் போது, பயணப்பையைக் கண்டெடுத்துள்ளார். குறித்த பயணப்பையில் சிறிய தொகை பணம், சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு, ஏ.ரி.எம் காட், அலைபேசி உட்பட முக்கிய ஆவணங்களும் இருந்துள்ளன.

தொடர்ந்து, ஓட்டோ சாரதி நுவரெலியா சுற்றுலா பொலிஸாருக்கு தகவல் வழங்கிவிட்டு, இந்திய பிரஜை தங்கியிருந்த விடுதியைக் கண்டறிந்து, இந்திய பிரஜையுடன் தொடர்பை ஏற்படுத்தி, நானுஓயா, பங்களாவத்த என்ற இடத்துக்கு அழைத்து, பொலிஸார் முன்னிலையில் பயணப்பை சரி பார்க்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நேர்மை நடத்தையை வெளிக்காட்டிய ஓட்டோ சாரதிக்கு நன்றி தெரிவித்து, பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

## மல்லியப்பூ சந்தி பஸ்தரிப்பிடத்தில் சடலம்

■ செ.தி பெருமாள்



மல்லியப்பூ சந்தியில் உள்ள பஸ்தரிப்பிடத்தில் இறந்த நிலையில் காணப்பட்ட 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர். இவரை அடையாளம் காண பொது மக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

## 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பு, வெள்ளிக்கிழமை (14) யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம், பல்கலைக் கழகப் பதிவாளர் வி. காண்டீபன், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் எஸ். கே பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளித்தார். அங்கு அவர் வழங்கிய ஊடக விவரிப்பில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு :

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் தங்கப் பதக்கங்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைகள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1,885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

## பிரதான பொலிஸ் பரிசோதகர் அப்துல் மஜீத் ஓய்வு

■ பாறுக் ஷிஹான்



அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப்பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய, பிரதான பொலிஸ் பரிசோதகர் மீராசாஹிப் அப்துல் மஜீத் வெள்ளிக்கிழமை (14) தனது 60 ஆவது வயது பூர்த்தி காரணமாக பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

சம்மாந்துறைப் பிரதேசத்தில் இஸ்மாலெப்பை மீராசாஹிப் மற்றும் சின்ன லெப்பை ஆசியா உம்மாவுக்கு மகனாக 14.07.1963ஆம் ஆண்டு பிறந்த அப்துல் மஜீத் சம்மாந்துறை அல்-மர்ஜான் தேசிய பாடசாலையில் கற்றதுடன், 1985ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்தார்.

இவருக்கான, பிரியாவிடை நிகழ்வு அக்கரைப்பற்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமன் பண்டார வழிகாட்டலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விஜயதுங்க பண்டார தலைமையில், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீட

## மருத்துவ பயிற்சிக்கு நடவடிக்கை

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கு, மருத்துவ பயிற்சியை பெற்று கொடுப்பதற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைளை பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, காவத்தை ஆதார வைத்தியசாலையை பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆவணங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு புதன்கிழமை (12) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திஸாநாயக்க முன்னிலையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் உதய ரத்நாயக்க, சப்ரகமுவ மாகாண சுகாதர சேவை பணிப்பாளர் டொக்டர் கபில கன்னங்கர ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றது.

## வவுனியா பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர் சங்க நிர்வாகசபை

■ பாறுக் ஷிஹான்

வவுனியா பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் வியாழக்கிழமை (13) வவுனியா பூந்தோட்ட வவுனியா பல்கலைக்கழக கட்டடத் தொகுதியில் சங்கத்தின் தற்காலிக தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தலைவராக கே. பூங்கண்ணன், செயலாளராக யூ.எல் றியாழ் உபதலைவரராக திருமதி பீ. அனுஷா, உப செயலாளராக திருமதி என். ராஜகுமாரி, பொருளாளராக சி. சுதர்சன் உட்பட தி. ஜே.எப் ஜஸ்றீன், எம். சுதர்சன், எஸ். சைரஜன், திருமதி கு. டனுஷா, உள்ளக கணக்காய்வாளராக செல்வி த. தாட்சாயினி, விளையாட்டு இணைப்பாளராக சி. ரகுவரனும் தெரிவு செய்யப்பட்டனர்.



# இறக்குமதி கட்டுப்பாடுகளின் உண்மையான செலவு

இலங்கையில், 2020 ஏப்ரல் மாதம் முதல் 2022 செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் எட்டு தடவைகள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவிப்புகள் வெளியாகி இருந்தன. இதில் தற்காலிக இடைநிறுத்தங்கள், தடைகள், இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்கள், கடன் அடிப்படையிலான தேவைப்பாடுகள் போன்றன அடங்கியிருந்தன.

இந்தக் கட்டுப்பாடுகள் பல்வேறு இறக்குமதி பிரிவுகளில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பைக் கொண்டிருந்தன. அதில், மூலப் பொருட்கள், இடைப்பட்ட பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் போன்றன அடங்குகின்றன. இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் 9.8% ஆனவைக்கு மாத்திரமே இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன.

அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை தணிப்பதனூடாக அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் போதும், உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மூலப் பொருட்கள் போன்றன தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்ட வண்ணமிருந்தன.

உள்நாட்டு பாவனைக்காக ஏற்றுமதி சார் மூலப் பொருட்கள், இடைத்தரப் பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதியில் இலங்கை உறுதியாக தங்கியிருப்பதால், உள்நாட்டு உற்பத்தியில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்காக இந்தப் பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகளிலிருந்து தவிர்க்கப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இறக்குமதி கட்டுப்பாடுகள், உள்நாட்டுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்கு காரணமாக அமைந்திருப்பதுடன், வீட்டுப்பாவனைக்காக எளிமையான நுகர்வோர் பொருட்கள் மற்றும் உணவுகளை தயாரித்துக் கொள்ளவும் ஏதுவாக அமைந்துள்ளன. வளங்கள் பன்முகப்படுத்தப்படுவதால் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஏற்றுமதித் துறையும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

நகரங்களிலும் அதனை அண்மித்து வாழும் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமையால், உணவுப் பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வது முக்கியமானதாகும். உணவு விலைகள் அதிகரிப்பு, தட்டுப்பாடு போன்றவற்றால் குறைந்த வருமானம் பெறுவோர் மீது இந்தக் கட்டுப்பாடுகள் அதிகளவு அழுத்தத்தை பிரயோகிக்கின்றன. எவ்வாறாயினும், இறக்குமதி மாற்றீடு காரணமாக, விவசாயத் துறையில் ஊழியர் புரள்வு, தக்கவைப்பு போன்றவற்றை பேணவும் முடிந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் பிரகடனப்படுத்தப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளில் தற்போது படிப்படியாக தளர்வுகள் மேற்கொள்ளப்படும் நிலையில், இந்த மீளாய்வு செயன்முறைக்கு இலங்கை முன்னுரிமை வழங்க வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளில் தங்கியிருக்கும் தொழிற்றுறைகள் மற்றும் நுகர்வோர் மற்றும் தொழிற்றுறைகளின் கருத்துக் கேட்டறிதல்கள் தீர்மானமெடுத்தல்களில் முக்கிய பங்காற்ற வேண்டும். சில இடைப்பட்ட பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவதனூடாக, புத்தாக்கத்தை ஊக்குவிக்க முடியும் என்பது, சர்வதேச பெறுமதி சங்கிலிகளில் பங்கேற்பதற்கும் அனுமதியளிப்பதாக அமையும். எவ்வாறாயினும், உணவு, மருந்துப் பொருட்கள் போன்ற நுகர்வோர் பொருட்கள் மீதும் திருத்தங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான்; சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானவை.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும்; சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளிர்மையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### இலங்கையர்கள் ஞாபகம் வைத்திருக்க வேண்டிய

# 'கறுப்பு ஜூலை' எனும் கறுப்புச் சரித்திரம்




என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


'ஜூலை' என்றதும், கடந்த வருடம் நடந்த 'அறகலய'வைக் கொண்டு, இந்த மாதத்தை அடையாளப்படுத்த சிலர் எத்தனிக்கிறார்கள். 1983 இலிருந்த இலங்கையைப் பொறுத்தவரையில், ஜூலை என்பது, 'கறுப்பு ஜூலை' தான். அது, தமிழர்கள் மீதான இனஅழிப்பு வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்ட அழிக்கப்பட முடியாத கறுப்புச் சரித்திரமாக உள்ளது.

உலகளவில் நாகரிகமடைந்த நாடுகளில், தம்மக்கள் மற்றும் வேறுநாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளுக்காக, அந்நாடுகள் மன்னிப்புக் கேட்டிருக்கின்றன. அதற்கான நட்டஈடுகளை பல தசாப்தங்கள் கழித்தும் வழங்கி இருக்கின்றன. மேலும், குறைந்தபட்சம் அந்த அநீதியை நினைவில் கொள்ள மக்களுக்கு, சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. அது, இதுபோன்றதொரு சம்பவம் இனி இங்கு நடக்கக்கூடாது என்ற எண்ணத்தை தம்மக்கள் மத்தியில், குறிப்பாக எதிர்கால சந்ததியினர் மத்தியில் வளர்ப்பதற்கான முயற்சியாகும்.

'வாழ்வுக்கான காரணம்' (The Life of Reason) எனும் நூலில் ஜோர்ஜ் சன்ரயானா குறிப்பிட்டிருப்பதுபோல, 'வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், வரலாற்றை மீள அரங்கேற்றுவதற்குச் சபிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்'. இன்றுவரை இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவங்கள், இனவாத அரசியல், பேரினவாத-மைய ஆட்சி என்பவை எல்லாம், இலங்கை வரலாற்றில் இருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே பறைசாற்றி நிற்கிறது.

'கறுப்பு ஜூலை' தொடர்பில் இலங்கை அரசு மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கை என்ன என்று கேட்டால், அதற்குப் பதில் தேடுவது கடினமான காரியம். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த கடைசி வருடத்தில், 2004இல், அதாவது 'கறுப்பு ஜூலை' இடம்பெற்று 21 ஆண்டுகளின் பின்னர், ஜனாதிபதியாக அவர் மன்னிப்பொன்றை கேட்டிருந்தார். அது இவ்வாறு அமைந்திருந்தது:

"இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் கூட்டாக பழியை ஏற்று, பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இலங்கை அரசின் சார்பிலும், அரசாங்கத்தின் சார்பிலும் மற்றும் நம் அனைவரின் சார்பிலும் அந்தப் பணியை எனக்கே ஒதுக்க விரும்புகிறேன்"

இதில், இலங்கை அரசு மன்னிப்புக் கேட்கிறது என்ற வார்த்தையே வரவில்லை. மன்னிப்பே கேட்காத மன்னிப்புக்கேட்டல் இது. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பற்றி, தன்னுடைய நூலுக்கு விக்டர் ஐவன் வைத்த தலைப்பு தான் ஞாபகத்துக்கு வருகிறது: 'சௌர ரஜின' (ஏமாற்றுக்கார ராணி).

மேற்சொன்ன வார்த்தைகளோடு மட்டும் நிற்கவில்லை. 1983 'கறுப்பு ஜூலை' வன்முறைகளில் பாதிக்கப்பட்ட 937 பேருக்கு 72.3 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆளுக்கு ஏறத்தாழ தலா 77,000 ரூபாய்! எவ்வளவு பெரிய நட்டஈடு! எத்தனை தாரள மனம்!

இரத்மலானை நகரம் பல தொழிற்சாலைகளின் இருப்பிடமாகவும் இருந்தது. அங்கமைந்திருந்த தமிழருக்குச் சொந்தமான 'ஜெட்றோ காமண்ட்ஸ்' என்ற ஆடைத்தொழிற்சாலையும் 'டாடா காமண்ட்ஸ்' என்ற ஆடைத்தொழிற்சாலையும் இன அழிப்புக் காடையர்களின் தாக்குதலுக்குள்ளாகி முற்றாக அழித்தொழிக்கப்பட்டன. இதைவிடவும் இரத்மலானை பகுதியிலும் அதை அண்மித்த பகுதியிலும் அமைந்திருந்த எஸ்-லோன் தொழிற்சாலை, பொண்ட்ஸ் தொழிற்சாலை, றீவ்ஸ் ஆடைத் தொழிற்சாலை, ஹைட்றோ ஆடைத்தொழிற்சாலை, ஹைலக் ஆடைத்தொழிற்சாலை, ஏ.ஜீ.எம். ஆடைத்தொழிற்சாலை, மன்ஹட்டன் ஆடைத்தொழிற்சாலை, பொலிபக் தொழிற்சாலை என்பனவும் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு, எரியூட்டி அழிக்கப்பட்டன.

மேலும், பெரெக் தொழிற்சாலை, மஸ்கன்ஸ் அஸ்பெஸ்ரஸ் தொழிற்சாலை என்பனவும் தாக்கியழிக்கப்பட்டன. ஏறத்தாழ இரத்மலானை பகுதியில் மட்டும் தமிழர்களுக்குச் சொந்தமான 17 தொழிற்சாலைகள் அழித்தொழிக்கப்பட்டன. கொழும்பில் அமைந்துள்ள தமிழ் மக்களின் பொருளாதார அஸ்திவாரங்கள் அழித்தொழிக்கப்பட்டன. மஹாராஜா நிறுவனம், சென் அந்தனீஸ் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ், கே.ஜீ இண்டஸ்ட்ரீஸ், ஈஸ்வரன் பிரதர்ஸ் எனத் தமிழர்களுக்குச் சொந்தமான பல வணிக, கைத்தொழில் நிறுவனங்கள் இலங்கையில் கோலோச்சிய காலமது. இந்த அத்தனை நிறுவனங்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளும் வணிக, வர்த்தக நிலையங்களும் தாக்குதலுக்குள்ளாகி அழிக்கப்பட்டன. இந்த இனரீதியான பொருளாதார அழிப்பிலிருந்து, இன்றுவரை தமிழினம் மீண்டெழவில்லை! இதற்கு யாரும் மன்னிப்புக் கேட்கவுமில்லை; நட்டஈடு தரவுமில்லை.

தமிழ் மக்கள் தேடித்தேடி வேட்டையாடப்பட்டார்கள். தமிழர்கள் அதிகம் செறிந்து வாழ்ந்த வெள்ளவத்தை, தெஹிவளையில் இன அழிப்புக் கும்பல் புகுந்தபோது, அதன் விளைவு பாரதூரமாக இருந்தது. ஒரு திட்டமிட்ட வகையில் இன அழிப்புக் காடையர்கள் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று கட்டளைகளின் பிரகாரம் இந்தக் காடையர்கள் இயங்கியதாக ரீ.டீ.எஸ்.ஏ திஸாநாயக்க குறிப்பிடுகிறார். முதலாவது கட்டளை 'கட'; அதாவது சிங்களத்தில் உடை.

இரண்டாவது கட்டளை 'அத'; அதாவது சிங்களத்தில் இழு (இது உள்ளிருப்பவர்களை இழுத்து வெளியில் போடுதலைக் குறிக்கிறது).

மூன்றாவது கட்டளை 'கினி'; அதாவது சிங்களத்தில் நெருப்பு (இது எரியூட்டுவதைக் குறிக்கிறது). இப்படியாகத் திட்டமிட்ட முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தமிழர்களும் தமிழர்களின் வீடுகள், வணிக, வர்த்தக மற்றும் வியாபார நிலையங்கள் என்பனவெல்லாம் தாக்கியழிக்கப்பட்டபின் "அபி சுத்த கரா" (நாம் சுத்தம் செய்துவிட்டோம்), "சிங்கள ஹமுதாவட்ட ஜயவேவா" (சிங்களப் படைக்கு வெற்றியுண்டாகுக) என்ற ஜய கோசங்கள் இன அழிப்புக் காடையர்களால் எழுப்பப்பட்டன எனத் தன்னுடைய கட்டுரையொன்றில் ராஜன் ஹூல் பதிவு செய்கிறார். எத்தனை தூரம் திட்டமிட்டு இது நடத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பல ஆய்வாளர்களும் மிகத்தெளிவாகப் பதிவுசெய்து இருக்கிறார்கள்.

'கறுப்பு ஜூலை' இன அழிப்பு வன்முறையின் விளைவாக, எத்தனை தரமான மூளைகள் இந்த நாட்டை விட்டு வெளியேறின! அத்தனையும் இந்த நாட்டை வளப்படுத்தி இருக்கக்கூடிய திறமை வாய்ந்த மூளைகள். ஆனால், இனவெறி கொண்டவர்களுக்கு அதைப்பற்றி எல்லாம் அக்கறையில்லை. இதனால், இந்த நாட்டுக்கு எவ்வளவு பெரிய இழப்பு என்பதைப் பற்றி யோசிக்கக்கூடிய அளவுக்குக்குக் கூட புத்தியில்லாத இனவெறிச் சீழ்பிடித்த மூளையைக் கொண்ட கூட்டத்திடம் இந்த நாடு சிக்கி, இன்று சின்னாபின்னமாகிப்போய் நிற்கிறது.

இந்த வரலாற்றை இலங்கை மறந்துபோனால், இந்தச் சீழ்பிடித்த கூட்டம், மீண்டும் மீண்டும் இதையே இங்கு அரங்கேற்றிக் கொண்டிருக்கும். அதுதான் இன்றுவரை இலங்கையில் நடந்துகொண்டிருக்கிறது. இது மாற வேண்டும்.

இத்தகைய வரலாற்று அட்டூழியங்களை அங்கிகரிப்பதும், பொறுப்பேற்பதும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் உதவுகிறது.

ஒரு நேர்மையான மன்னிப்பை திறந்த மனதோடு கேட்பதன் மூலம், குறிப்பிட்ட இன சமூகங்கள் மீது இழைக்கப்பட்ட பெரும் துன்பங்களை அரசு ஒப்புக்கொள்கிறது மற்றும் அத்தகைய வன்முறை ஏற்படுவதற்கு அனுமதித்த அமைப்பு ரீதியான அநீதிகளை ஏற்றுக்கொள்வதாக அமையும். இது நீதிக்கு அவசியமானது.

மன்னிப்பு கேட்பது கடந்த கால தவறுகளை சரிசெய்வதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது; பாதிக்கப்பட்டவர்கள் தமது துயரங்கள் கேட்கப்பட்டதாக உணரக்கூடிய சூழலை உருவாக்குகிறது. மேலும், சகிப்புத்தன்மை, பன்முகத்தன்மை, மனித உரிமைகளின் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சமூகத்துக்கு ஒரு சக்திவாய்ந்த செய்தியை குறித்த மன்னிப்புக் கேட்டல் அனுப்புகிறது.

மன்னிப்பு கேட்பதன் மூலம், அரசு நல்லிணக்க செயல்முறையைத் தொடங்கலாம். அதன் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் உள்ளடக்கிய மற்றும் சமமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு வேலை செய்யலாம். இதற்கெல்லாம் முறையான மன்னிப்புக் கேட்டல்தான் தொடக்கப்புள்ளி.

வரலாற்றில் இந்த இருண்ட அத்தியாயங்களை ஒப்புக்கொள்வதுடன், இந்த அட்டூழியங்களை நினைவுகூறுவது என்பது, வெறுப்பு, பாகுபாடு, பேரழிவின் விளைவுகளைப் பற்றிய சக்திவாய்ந்த நினைவூட்டலாக செயற்படுகிறது. இது எதிர்கால சந்ததியினருக்கு இத்தகைய செயல்களின் விளைவுகளைப் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது என்பதோடு, அவை மீண்டும் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான கூட்டுப் பொறுப்பை வளர்க்கிறது.

பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வதன் மூலமும், வரலாற்று உண்மையை ஆவணப்படுத்துவதன் மூலமும், இனப் பதட்டங்களுக்கான அடிப்படைக் காரணங்களை எதிர்கொள்வதற்கும் தீர்வு காண்பதற்கும், உரையாடலை மேம்படுத்துவதற்கும், அனைத்து தனிநபர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் வழிசமைக்கிறது.

கடந்த காலத்தை நினைவில் கொள்வது, ஒரு சிறந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இதனை இலங்கை செய்ய வேண்டும். 'கறுப்பு ஜூலை' இலங்கையர்களுக்கு ஒரு சக்திவாய்ந்த வரலாற்றுப் பாடமாக இருக்க வேண்டும்.

## கடிதங்கள்

# கந்தளாயில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பகுதியில் திருடர்கள் இரவு வேளையில், தமது கைவரிசையை காட்டி வருவதாகவும் அண்மையில் திருட வந்த இரண்டு திருடர்கள் சி.சி.டி.வி கமெராவை கண்டதும் தலைதெறிக்க ஓடினார்கள் எனவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

கந்தளாயின் பேராறு, ரஜஎல, மத்ரஸா நகர், மூன்றாம் கொலனி போன்ற கிராமங்களில் உள்ள வீடுகளில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று உள்ளதாகவும் போதைக்கு அடிமையானவர்கள் தான் இச் செயலில் ஈடுபட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், இரவில் தூக்கம் இன்றி மக்கள் தவித்து வருவதாகவும் தனித்துக் குடியிருக்கும் வீடுகளிலும், ஆட்கள் குடியிருக்கும் வீடுகளிலும் துணிந்து திருட்டு சம்பவங்கள் இடம்பெறுவது சாதாரணமாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருட்டுச் சம்பவங்கள் விடயத்தில், கந்தளாய் பொலிஸார் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்



### குழந்தை பருவ உளவியல் சமூக வளர்ச்சியில்

# திரை நேரத்தின் தாக்கம்

## விடுபடுவதற்கான வழிமுறைகள்



**திருமதி மாதங்கி சுதர்சன்**
தாதிய உத்தியோகத்தர்,
உளவியல் துறை,
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்



திரை நேரம் (Screen Time) என்பது தொலைக்காட்சி பார்ப்பது, வீடியோ கேம் விளையாடுவது அல்லது திரையுடன் கூடிய மின்னணு சாதனத்தைப் பயன்படுத்துவது (ஸ்மார்ட்ஃபோன், டேப்லெட் போன்றவை) ஆகியவற்றில் செலவழிக்கும் நேரத்தைக் குறிக்கும். குறிப்பாக, இன்றைய டிஜிட்டல் உலகில் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே பலதரப்பட்ட மின்னியல் தொழில்நுட்ப சாதனங்களான ஸ்மார்ட் போன், டேப்லெட் போன்றவற்றை மிக எளிதாக அணுகுவதற்கான வாய்ப்புகளை அதிகம் பெறுகின்றனர்.

மேலும், இன்று பல வீடுகளில் குழந்தைகள் அடம்பிடிக்கும் போதும், அவர்களுடைய அழுகையை நிறுத்துவதற்கும், உணவு ஊட்டும்போதும் பெற்றோர்கள் ஸ்மார்ட் போன்களில் கார்ட்டூன் வீடியோக்களை குழந்தைகளுக்கு பார்ப்பதற்கு அனுமதிப்பதையும் நாம் காண்கிறோம். ஒரு சிலர் தமது குழந்தை சிறுவயதிலிருந்தே மின்னணு சாதனங்களை இயக்குவதை பெருமையாக கூறுவதையும் அவதானிக்கின்றோம்.

### கவனத்தை ஈர்க்கும் திறன் (Attention span)

குழந்தை பருவத்தில் இருந்து வளர்ச்சியடைய வேண்டிய மிக முக்கியமான அம்சம் திறனாகும். இது குழந்தைகள் தமது கருமங்களில் உன்னிப்பாக கவனம் செலுத்தவும், அந்த கருமம் தொடர்பான வழிமுறைகளை பின்பற்றவும் உதவுகின்றது. எனினும், அதிகளவு திரை நேரம் குழந்தைகளின் கவனத்தை சிதறடித்து பிற்காலத்தில், கவனக்குறைவு பிரச்சினைகளுக்கு ஆளாக்கின்றது

மேலும், ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் இலத்திரனியல் சாதனங்களில் நேரத்தை செலவிடும் பிள்ளைகளுக்கு மனச்சோர்வு, பதட்டம் போன்ற உணர்ச்சி மற்றும் நடத்தைகள் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என இலங்கை தேசிய மனநல நிலையம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

### சமூக திறன்கள் (Social skills)

சமூக திறன்கள் உளவியல் சமூக வளர்ச்சியில் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். குழந்தைகள் நேருக்கு நேர் தொடர்பு கொள்வதன் மூலம், மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்புகொள்வது என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். ஆனால், இச்சாதனங்களின் அதிகரித்த பயன்பாட்டால், குழந்தைகள் மற்றவர்களுடன் செலவழிக்கும் நேரம் குறைவடைகின்றது. இது சமூக தனிமைக்கு இட்டுச்செல்வதுடன் குழந்தைகள், நண்பர்களை தேடிக்கொள்வதிலும் சவாலை எதிர்கொள்வதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

### உணர்ச்சி கட்டுப்பாடு (Emotional regulation)

உணர்ச்சி கட்டுப்பாடு என்பது, உளவியல் சமூக வளர்ச்சியின் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். குழந்தைகள் தங்கள் பராமரிப்பாளர்கள் மற்றும் சகாக்களுடன் தொடர்புகொள்வதன் மூலம், தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், அதிகப்படியான திரை நேரம், இந்தச் செயல்முறையை சீர்குலைக்கும். குழந்தை வளர்ச்சி தொடர்பாக வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், திரைகளில் அதிக நேரம் செலவிடும் குழந்தைகள், தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள்; அதிக எதிர்மறையான நடத்தைகளைக் காட்டுகிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது, குழந்தைகளின் உளவியல் சமூக வளர்ச்சிக்கு பல நன்மைகளை ஏற்படுத்தும். திரை நேரத்தைக் குறைப்பதன் மூலம், குழந்தைகளுக்கு நேருக்கு நேரான சமூகத் தொடர்பு, உடற்செயற்பாடு, கற்பனை விளையாட்டு என்பவற்றுக்கான வாய்ப்புகள் அதிகம் ஏற்படும். இது கவனத்தை மேம்படுத்தவும் உணர்ச்சி கட்டுப்பாடுகளை மேம்படுத்தவும் ஒட்டுமொத்த மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவும்.

மேலும், திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது உடல் ஆரோக்கியத்திலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். திரையில் அதிக நேரம் செலவழிக்கும் குழந்தைகளுக்கு உடற்பருமன், தூக்கக் கோளாறுகள், பிற உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் அதிகம். உடற் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும், திரை நேரத்தைக் குறைப்பதன் மூலமும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் பயனளிக்கும் ஆரோக்கியமான பழக்கங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் ஆய்வின்படி, இலங்கையில் குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரியாக 3-4 மணி நேரம் மின்னணு சாதனங்களில் செலவிடுகின்றனர். மேலும் 70% க்கும் அதிகமான குழந்தைகள் படுக்கைக்குச் செல்வதற்கு முன் மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இது அவர்களின் தூக்க முறைகள், ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் தீங்கு விளைவிக்கும். மேலும், மின்னணு சாதனங்களின் அதிகப்படியான பயன்பாடு உடல் பருமன், பார்வை பிரச்சினைகள் மற்றும் தசைக்கூட்டு கோளாறுகள் ஆகியவற்றை தோற்றுவிக்கின்றது.

### திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உதவிக்குறிப்புகள்:

**வரம்புகளை அமைத்தல் (Set Limits):**

திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உங்கள் பிள்ளைக்கு விளக்கவும் மற்றும் ஒவ்வொரு நாளும் திரையில் எவ்வளவு நேரம் செலவிடலாம் என்பதற்கு குறிப்பிட்ட வரையறைகளை அமைக்கவும். American Academy of Pediatrics இல், ஒரு நாளைக்கு 2-5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு மணிநேரத்துக்கு மேல் திரை நேரம் இருக்கக்கூடாது என்று பரிந்துரைக்கிறது.

**உள்ளடக்கத்தைக் கண்காணிக்கவும் (Monitor Content):**

உங்கள் குழந்தை பார்க்கும் அல்லது விளையாடும் உள்ளடக்கம் வயதுக்கு ஏற்றதா, கல்வி சார்ந்ததா என்பதை உறுதிப்படுத்தவும். கற்றல் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் செயற்களில் ஈடுபட உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும்.

**உடற்செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் (Encourage Physical Activity):**

ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்க உடற்செயற்பாடு மற்றும் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபட உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும். நடைபயிற்சி, பைக்கிங், நீச்சல் போன்ற குடும்ப நடவடிக்கைகளில் அவர்களுடன் பங்கேற்கவும்.

**தொழில்நுட்பம் இல்லாத வலயங்களை உருவாக்குங்கள் (Create Tech–Free Zones) :**

நேருக்கு நேர் தகவல்தொடர்பு மற்றும் திரை நேரத்தைக் குறைக்க, உங்கள் வீட்டில் சாப்பாட்டு மேசை அல்லது படுக்கையறை போன்ற தொழில்நுட்பம் இல்லாத வலயங்களை உருவாக்குங்கள்.

**ஒரு நல்ல முன்மாதிரியாக இருங்கள் (Be a Good Role Model):**

பெற்றோர்கள் தமது சொந்த திரை நேரத்தை முடிந்தளவு குறைத்துக்கொள்வதனூடாக, உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியமான தொழில்நுட்ப பழக்கங்களை கற்பிப்பதில் முன் மாதிரியாக இருங்கள்.

உங்கள் குழந்தை ஏற்கெனவே அதிகப்படியான திரை நேரத்தை வெளிப்படுத்தி இருந்தால், அவர்களை அதிலிருந்து மீட்கவும், ஆரோக்கியமான உளவியல் வளர்ச்சியை மேம்படுத்தவும் வழிகள் உள்ளன. திரைகளை உள்ளடக்காத பொழுதுபோக்குகள், செயற்பாடுகளில் ஈடுபட அவர்களை ஊக்குவிப்பதாகும்.

ஓர் இசைக்கருவியை வாசிப்பது, விளையாட்டுப் பயிற்சி செய்வது, வாசிப்பது, எழுதுவது ஆகியவை இதில் அடங்கும். மனதைத் தூண்டும், படைப்பாற்றலை ஊக்குவிக்கும் செயல்களை ஊக்குவிப்பதன் மூலம், குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் அனைத்து காலகட்டங்களிலும் உதவக்கூடிய பல்வேறு திறன்களையும் ஆர்வங்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

திரையின் நேரத்தைக் கட்டுப்படுத்துவது, அதை முற்றிலுமாக நீக்குவதைக் குறிக்காது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். திரைகள் கற்றல் மற்றும் பொழுதுபோக்குக்கான ஒரு மதிப்புமிக்க கருவியாக இருக்கலாம். மேலும், அளவான பயன்பாடாக இருந்தால், அவை குழந்தையின் வாழ்க்கையின் ஆரோக்கியமான பகுதியாக இருக்கும்.

# 'தராக்கி – ஈழத் தமிழ் ஊடக முன்னோடி' நூல் வெளியீடு





கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம், சிவராம் ஞாபகார்த்த மன்றம் - சுவிஸ் ஆகியன இணைந்து தொகுத்துள்ள 'தராக்கி - ஈழத் தமிழ் ஊடக முன்னோடி' நூலின் வெளியீட்டு நிகழ்வு, சனிக்கிழமை (15) மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் (தராக்கி) தொடர்பான, ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41பேர் எழுதிய கட்டுரைகள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊடகவியலாளர் டி. சிவராமின் குடும்பத்தினர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பேரின்பராஜா சபேஷ்










### 200ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி

# யாழ்ப்பாணக் கல்லூரியின் வாகன பவனி




வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமான பற்றிக்கோட்ட செமினரியினதும் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் ஒன்றுகூடல் வாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (15) ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக, பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன பவனி காலை 7 மணியளவில் கல்லூரி வாசலில் இருந்து ஆரம்பமாகி, கொட்டைக்காடு, அராலி, செட்டியார்மடம், துணைவி, நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, வட்டுகோட்டை வழியாக யாழ்ப்பாண கல்லூரியை வந்தடைந்தது.

இதன்போது பழைய கார்கள், தட்டி வான்கள், மோட்டார் சைக்கிள்கள், மினிபஸ்கள், வான்கள், சைக்கிள்கள், மாட்டுவண்டிகள் என்பவற்றில், பாடசாலை கொடிகளை பழைய மாணவர்கள் ஏந்தியவாறு பவனி வந்தனர்.

ஜூலை 22ஆம் திகதிவரை, பழைய மாணவர் வாரம் கோலாகலமாக இடம்பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்க ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. உலகம் முழுவதிலும் இருந்து வருகை தந்திருக்கும் கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வுகளில் துடிப்புடன் பங்கேற்று வருகின்றனர்.

நிதர்சன் வினோத்







# Ruhunu வைத்தியசாலையின் ஆடம்பர சிகிச்சை அறைகள்



Ruhunu Hospital, தனது சிகிச்சை வசதிகளில் புதிய மேம்படுத்தல்களாக - King's Court மற்றும் Presidential Suite ஆகிய ஆடம்பர சிகிச்சை அறைகளைத் திறந்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த அதிசொகுசு சிகிச்சை அறைகள் உயர்வகுப்பு சுகாதாரப் பராமரிப்பு அனுபவத்தை வழங்குவதுடன், அதிசிறந்த சௌகரியம், சொகுசு ஆகியவற்றின் இணைப்பையும் கொண்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு உடல்நலம், வசதியில் மிகச் சிறந்ததைத் தவிர வேறு எதற்கும் முக்கியத்துவம் அளிக்காத நோயாளர்களுக்கு இந்த அதிசொகுசு சிகிச்சை அறைகள் மிகச்சிறந்தவை. தங்கள் அந்தரங்கத்திற்கு மதிப்பளிக்கும் மற்றும் அமைதியான மற்றும் ஆடம்பரமான சூழலில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நோயாளர்களுக்கு இவை நேர்த்தியானவை. நீங்கள் உள்நாட்டவராக இருந்தாலும் சரி அல்லது சர்வதேச நோயாளராக இருந்தாலும் சரி, Ruhunu Hospital இன் King's Court மற்றும் Presidential Suite ஆகியவை நிகரற்ற சுகாதாரப் பராமரிப்பு அனுபவத்தை வழங்குகின்றன.

மாபிள் பதிக்கப்பட்ட தரையுடன் கூடிய இருக்கை அறை, சாப்பாட்டு அறை, சமையலறை, நோயாளியின் படுக்கை, துணைக்கு நிற்பவரின் படுக்கை, பெண்களுக்கான ஓய்வறை மற்றும் ஒரு குளியல் தொட்டி ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இந்தச் சொகுசு அறைகள் ஆடம்பரமான மற்றும் அந்தரங்கமான சூழலில் விசேட கவனிப்புத் தேவைப்படும் நோயாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரண்டு வகையான சொகுசு அறைகளும் 1,000 சதுர அடிக்கு மேல் இடவசதியைக் கொண்டுள்ளன. Ruhunu Hospital இல் இந்த இரண்டு வகையான அதிசொகுசு அறைகளுக்கும் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட மருத்துவ வல்லுநர்கள் மற்றும் தொண்டு சேவகர்கள் அடங்கிய பிரத்தியேக அணிகள் உள்ளன.

Ruhunu Hospital Pvt Ltd இன் இணைப் பிரதம நிறைவேற்று அதிகாரிகளான ரவீன் விக்கிரமசிங்க மற்றும் ஜனித் லியனகே ஆகியோர் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "நோயாளர்களுக்கு அதிசொகுசு மற்றும் ஆறுதலின் நிகரற்ற அனுபவத்தை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எமது மருத்துவமனை தனது நோயாளர்களுக்கு அதிசிறந்த சுகாதார சேவைகளை வழங்க உறுதிபூண்டுள்ளது. Ruhunu Hospital ஆனது அதிசிறந்த சுகாதாரப் பராமரிப்பு, அதிசொகுசு வசதியைக் கோரும் நோயாளர்கள் நாட வேண்டிய இடமாக மாறுவதற்கு தயாராக உள்ளது. நோயாளர்கள் மருத்துவமனையின் வைத்தியர்கள் மற்றும் தாதியரின் நிபுணத்துவ அணியிடமிருந்து தனிப்பயனாக்கப்பட்ட மருத்துவ சேவையைப் பெறலாம். இவை அனைத்தும் செழுமையான சொகுசு அறைகளின் உள்ளே வழங்கப்படுகின்றன. அடுத்த கட்டமாக நாங்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டு மருத்துவ சுற்றுலாத்துறையில் கவனம் செலுத்தி Ruhunu Hospital ஐ சுகாதாரப் பராமரிப்பில் உலகளாவிய செயற்பாட்டாளராக மேம்படுத்துவோம்" என்று குறிப்பிட்டார்.

Prime Group இன்

## 'The Grand' இல் SLT-MOBITEL Fibre வசதி




SLT-MOBITEL, Prime Lands Residencies PLC உடன் அண்மையில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அதனூடாக, கொழும்பு 7, வோட் பிளேசில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதி சொகுசு வதிவிடத் தொகுதியான 'The Grand' இல் SLT-MOBITEL Fibre இணைப்ப வசதியினூடாக பரிபூரண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க SLT-MOBITEL முன்வந்துள்ளது.

SLT இன் பிரதம பிராந்திய வியாபார அதிகாரி இமந்த விஜேகோன் மற்றும் Prime Lands Residencies PLC ஆகியவற்றின் முகாமைத்துவ பணிப்பாளர் மஞ்சுள வீரக்கொடி ஆகியோரிடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் SLT-MOBITEL மற்றும் Prime Lands Residencies PLC ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள Grand தொடர்மனைகளினூடாக உயர் சௌகரியம் மற்றும் பிரத்தியேகத்தன்மை போன்றன வழங்கப்படுவதுடன், வாழ்வதற்கு பொருத்தமான உயர்ந்த சொகுசான நியமங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. 37 மாடிகளைக் கொண்டதுடன், 160 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளது. Grand இனால் 50,000 சதுர அடிப் பரப்பளவு இடவசதியைக் கொண்டுள்ளதுடன், சில மாடிகளில் ஓய்வுநேர மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்காக உள்ளக மற்றும் வெளியக வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பங்காண்மை தொடர்பில் மஞ்சுள வீரக்கொடி கருத்துத் தெரிவிக்கையில், "Grand என்பது வசிப்போருக்கு மிகச் சிறப்பான வாழ்க்கை முறை அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. SLT-MOBITEL உடன் கைகோர்த்து உள்ளமையினூடாக, உயர்தரம் வாய்ந்த ஃபைபர் இணைப்புகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதிலும், அதனூடாக smart home மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்பதிலும் முழு நம்பிக்கையை கொண்டுள்ளோம்" என்றார்.

SLT-MOBITEL இனால், Grand இன் சகல பகுதிகளுக்கும் ஃபைபர் இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு, அதிவேக இணைய வசதி வழங்கப்படுவதுடன், தெளிவான குரல் தொடர்பாடல் மற்றும் உலகத் தரம் வாய்ந்த களிப்பூட்டும் அம்சங்களுடனான high definition (HD) TV வசதியை PEO TV ஊடாக பெற்றுக் கொள்ளவும் முடியும்.

SLT இன் பிரதம பிராந்திய வியாபார அதிகாரி இமந்த விஜேகோன் கருத்துத் தெரிவிக்கையில், "Prime Group இன் இந்த மாபெரும் 'The Grand' வோட் பிளேஸ் திட்டத்துடன் கைகோர்ப்பதையிட்டு பெருமை கொள்கின்றோம். ஸ்மார்ட் தொடர்மனைகளினூடாக, மாறிவரும் நுகர்வோரின் வாழ்க்கை முறையில் அடிப்படை மாற்றம் பிரதிபலிக்கப்படுகின்றது. அவற்றில் காணப்படும் நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் ஃபைபர் தீர்வுகளினூடாக, SLT-MOBITEL இனால், உலகத் தரம் வாய்ந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அவற்றினூடாக சர்வதேச நியமங்களை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

சொகுசான வாழிடத்தை உருவாக்குவதில் Grand இன் பெறுமதிகளை பேணும் வகையில், வசதிப்போருக்கு SLT-MOBITEL இன் துரித மற்றும் தங்கியிருக்கக்கூடிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் smart home automation தீர்வுகளினூடாக எதிர்காலத்துக்கு பொருத்தமான வாழ்க்கை முறையை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். SLT-MOBITEL இன் ஸ்மார்ட் வாழிட தீர்வுகளினூடாக, உயர் தொழில்நுட்ப செயற்பாடுகளை அணுகக்கூடியதாக இருக்கும் என்பதுடன், வாழ்க்கையை அதிகளவு அனுபவித்து வாழக்கூடியதாக இருக்கும். புதிய சாதனங்கள் மற்றும் அப்ளிகேஷன்களை மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புடன் அனுபவிக்கலாம்" என்றார்.

## யாழ். கோட்டையில் தொல்லியல் தினம்



இலங்கை தொல்லியல் திணைக்களம் ஆரம்பமாகி 133 ஆவது ஆண்டை முன்னிட்டு, தொல்லியல் தினம் யாழ். கோட்டையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை மற்றும் கலாசார சுற்றுலாத்துறை மாணவர்களுக்கு தொல்லியல் செயற்பாடுகளில் பயன்படுத்தபடும் முறைமைகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, மேலாய்வு, மேலாய்வு ஜி.பி.எஸ் முறை, அகழ்வாய்வுக்கு பயன்படுத்தப்படும் கருவிகள், அகழ்வாய்வு பிரயோகம் ஆகியவை உள்ளடக்கிய பயிற்சிகளுடன் இயற்கை விஞ்ஞானம்சார் தொல்லியல், கற்காலம் குறித்த விரிவுரைகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஆரம்ப நிகழ்வுகளில் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், யாழ். பல்கலைக்ககழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜ், முன்னாள் பணிப்பாளர் தொல்லியல்துறை நிமால்பெரேரா, பிரதேச தொல்லியல் காரியாலய உதவி பணிப்பாளர் யாழ்ப்பாணம் யு.ஏ பந்துலஜீவ, கலாசார மத்திய நிதிய திட்ட முகாமையாளர் காமினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .

நிதர்சன் வினோத்

## இராணுவத்தினரால் சிரமதானம்

இராணுவத்தினரால் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தல் விசேட வேலைத்திட்டம் வெள்ளிக்கிழமை (14) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் இராணுவ முகாம் சூழல் அமைந்துள்ள கடற்கரை மற்றும் அண்டிய பல பகுதிகள் சிரமதான பணியை இராணுவத்தினர் முன்னெடுத்தனர்.

பாறுக் ஷிஹான்



## கிளி. சிவபாத கலையகதின் 40 வருட நிறைவு

கிளிநொச்சி சிவபாத கலையகம் அ.த.க பாடசாலையின் 40 வருட ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் அதிபர் திருமதி சோதிலிங்கம் பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைதீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் பாடசாலையின் ஸ்தாபகர் கலாநிதி வே. சர்வேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் –05 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற மாணவிக்கு சைக்கிளும் இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற இரண்டு மாணவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் பணப் பரிசும் ஸ்தாபகர் கலாநிதி வே. சர்வேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணியம் பாஸ்கரன்



## 'சக்சஸ்' பாலர் பாடசாலையின் உணவுத் திருவிழா

திருகோணமலை சக்சஸ் பாலர் பாடசாலையால் ஆறாவது முறையாக நடத்தப்பட்ட உணவுத் திருவிழா – 2023 சனிக்கிழமை (15) திருகோணமலை சாஹிறா கல்லூரி மைதானத்தில் பாடசாலையின் அதிபர் திருமதி சாஷியா முபாறக் தலைமையில் நடைபெற்றது.

இந்த உணவுத் திருவிழாவுக்கு அதிதிகளாக சாஹிறா கல்லூரியின் அதிபர் எம்.எம்.எம் முஹைறஸ், திருமலை ஜமாலியா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜே.எம் சாலி, முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே. அமுதியா, இளைஞர் கழக உத்தியோகத்தர் அலாவுதீன்பாவு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அபு அலா



நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரியில்

## கல்வி நிதியத்தின் நிகழ்ச்சி

அவுஸ்திரேலியாவில் இருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெற்றுவரும் நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் தகவல் அமர்வும் செவ்வாய்க்கிழமை (11) கல்லூரியின் நூல் நிலைய மண்டபத்தில், அதிபர் ந. புவனேஸ்வரராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நிதியத்தின் தலைவர் லெ. முருகபூபதியும் ஆசிரியர்களும் உதவி பெறும் மாணவர்களின் தாய்மாரும் கலந்துகொண்டனர். நிதியத்தின் தொடர்பாளர் ஆசிரியை செல்வி லோஜினியின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கல்லூரியின் முதலாவது தலைமை ஆசிரியர் பண்டிதர் க. மயில்வாகனனத்தின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மங்கள விளக்கேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

எம். இஸட் ஷாஜஹான்



## தமிழ் மொழித் தினப்போட்டி

மத்திய மாகாண வத்தேகம கல்வி வலய தமிழ் மொழித் தினப் போட்டிகள், இரஜவலை இந்து தேசிய கல்லூரியில் வத்தேகம கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ.எம் ஹாசிம் தலைமையில் நடைபெற்றபோது மங்கள விளக்கேற்றப்படுவதையும் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்படுவதையும் பார்வையாளர்களையும் காணலாம்.

மெய்யன்





இலங்கை எதிர் பாகிஸ்தான்: முதலாவது டெஸ்டில்

# முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்டின் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஆரம்பத்திலே ஷகீன் ஷா அஃப்ரிடி (3), நசீம் ஷாவிடம் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பின்னர் ஜோடி சேர்ந்த அஞ்சலோ மத்தியூஸும், தனஞ்சய டி சில்வாவும் இலங்கையின் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 64 ஓட்டங்களுடன் அப்ரார் அஹ்மட்டிடம் மத்தியூஸ் வீழ்ந்தார்.

இதனையடுத்து ஜோடி சேர்ந்த டி சில்வாவும், சதீர சமரவிக்கிரமவும் இனிங்ஸை நகர்த்திய நிலையில் நேற்றைய முதல்நாளின் இறுதிப் பந்தாக அமைந்த பந்தில் 36 ஓட்டங்களுடன் அக்ஹா சல்மானிடம் சமரவிக்கிரம வீழ்ந்தார்.

அந்தவகையில் தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களை இலங்கை பெற்றுள்ளது. தற்போது களத்தில் டி சில்வா 94 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

# புத்தளத்தில் உடற்கல்வி போதனாசிரியர் சகோதரர் சாதனை

எம்.யூ.எம் சனூன்



அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரச மட்டத்திலான விளையாட்டுப் போட்டித் தொடரில், (Masters Athletic Sri Lanka Champion Meet) 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் புத்தளம் நகரை சேர்ந்த விளையாட்டு துறை பொறுப்பாசிரியர் எம்.எப்.எம். துபைல் இரண்டாமிடத்தைப் பிடித்தார்.

இதே தொடரின் ஓட்டப்போட்டியில் ஆரம்பத்திலிருந்தே முன்னிலையில் வந்த, புத்தளம் நகரின் மற்றுமொரு விளையாட்டு துறை பொறுப்பாசிரியரும், துபைல் ஆசிரியரின் சகோதரருமான எம்.எப்.எம். ஹுமாயூன் போட்டி முடிவடைவதற்கு மூன்று மீற்றர் தூரம் இருக்கையில் கால் தடுக்கி வீழ்ந்ததில் அவருக்கான சந்தர்ப்பம் கைநழுவி போனது.

ஹுமாயூன் ஆசிரியருக்கான முதல் சந்தர்ப்பம் அற்று போனதால் அவரை பின் தொடர்ந்து வந்த இராணுவக் கமாண்டர் ஒருவர் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

எனினும் உயரம் பாய்தல் போட்டியில் ஆசிரியர் ஹுமாயூன் முதலாமிடம் பெற்று புத்தளம் நகருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தங்க பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

கடந்த 2017ஆம் ஆண்டு உயரம் பாய்தலில் சாதனையாக இருந்த 1.57 மீற்றர் உயரம் சாதனையை முறியடித்து 2023ஆம் ஆண்டின் போட்டித் தொடரில் 1.60 மீற்றர் உயரம் என்ற புதிய (New Meet Record Sri Lanka) சாதனையை ஹுமாயூன் நிலை நாட்டியுள்ளார்.



தென்கிழக்கு பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டம்:

# சம்பியனான வர்த்தக முகாமைத்துவ, பிரயோக விஞ்ஞான பீடங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்


தென்கிழக்குபலகலைக்கழக பீடங்களுக்கிடையிலான பெருவிளையாட்டு நிகழ்வுகளில் கூடைப்பந்தாட்டத் தொடரில் வர்த்தக முகாமைத்துவ பீடமும், பிரயோக விஞ்ஞான பீடமும் சம்பியனாகின.

பெண்களில் பொறியியல் பீடத்தை வென்று வர்த்தக முகாமைத்துவ பீடம் சம்பியனானதுடன், ஆண்களில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தை வென்று பிரயோக விஞ்ஞான பீடம் சம்பியனாகியது.

# சிற்றி செல்லும் ஹக்கிமி?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான கைல் வோக்கரின் பிரதியீடாக பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனின் பின்களவீரரான அஷ்ரஃப் ஹக்கிமியை அக்கழகம் அடையாளப்படுத்தியுள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுக்கு இப்பருவகாலத்தில் 33 வயதான வோக்கர் செல்வாரெனக் கருதப்படுகிறது. வோக்கருக்கு பெப் குவார்டியோலாவின் கீழ் கடந்த பருவகாலத்தில் தொடர்ச்சியான ஆரம்பங்கள் வழங்கப்படவில்லை.



அமெரிக்கா

# அலாஸ்காவில் நிலநடுக்கம்

அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (16) 7.4 ரிக்டர் அளவுகோலில் சக்தி வாய்ந்த பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது, கடலுக்கடியில் 9.3 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



புதுடெல்லி

## புதுடெல்லி அவசர சட்டத்தை எதிர்க்க காங்கிரஸ் முடிவு

புதுடெல்லி அரசாங்கத்தின் அதிகாரத்தை குறைக்கும் வகையில் மத்திய அரசு அவசர சட்டம் ஒன்றை கொண்டு வந்தது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எதிர்க்கட்சி தலைவர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

இந்த அவசர சட்டம் விவகாரத்தில் காங்கிரஸ் தங்களுக்கு ஆதரவு தெரிவிக்காதது குறித்து கெஜ்ரிவால் பாட்னாவில் நடந்த எதிர்க் கட்சிகள் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இதனால் எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டத்தை புறக்கணிக்கப் போவதாக அவர் கூறினார்.

இந்த நிலையில் புதுடெல்லி அரசாங்கதின் நிர்வாகப் பணிகள் தொடர்பான மத்திய அரசு அவசரச் சட்ட விவகாரத்தில் ஆம் ஆத்மி கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக மறைமுகமாக காங்கிரஸ் தெரிவித்து உள்ளது.

“ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் உள்ளூராட்சி அமைப்புகள் மீது பாரதிய ஜனதா அரசாங்கம் மேற்கொள்ளும் தாக்குதலை காங்கிரஸ் எப்போதும் எதிர்த்துள்ளது. நேரடியாகவோ அல்லது கவர்னர்கள் மூலமாகவோ இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பாராளுமன்றத்தில் காங்கிரஸ் இதை எதிர்த்துள்ளது. தொடர்ந்து எதிர்ப்போம்” இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.



சென்னை

## செந்தில் பாலாஜி விவகாரம் மீண்டும் கேவியட் மனு



அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை காவலில் எடுத்து விசாரிக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்ற 3ஆவது நீதிபதி தீர்ப்பளித்துள்ள நிலையில், அமலாக்கத் துறை தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை கைது செய்த நிலையில் அவரை விடுவிக்கக் கோரி அவருடைய மனைவி மேகலா தொடர்ந்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, டி.பரத சக்ர வர்த்தி ஆகியோர் மாறுபட்ட தீர்ப்பை அளித்தனர்.

செந்தில் பாலாஜியை கைது செய்தது சட்டவிரோதம் என நீதிபதி நிஷாபானுவும், அமலாக்கத் துறையின் கைது நடவடிக்கை சட்டப் பூர்வமானது தான் என நீதிபதி டி.பரத சக்ர வர்த்தியும் தீர்ப்பளித்து இருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கை விசாரித்த 3ஆவது நீதிபதியான சி.வி கார்த்திகேயன், நீதிபதி டி.பரத சக்ர வர்த்தியின் தீர்ப்பை உறுதி செய்தார். அவர் தனது தீர்ப்பில், செந்தில் பாலாஜியும் சட்டத்துக்கு உட்பட்டவர்தான் என்பதால் அவரை அமலாக்கத் துறை கைது செய்தது செல்லும் என்றும், அவர் பரிபூரணமாகக் குணமடைந்த பிறகு அவரை காவலில் எடுத்து விசாரிக்கலாம் என்றும் தீர்ப்பளித்தார்.

தென்கொரியா

## தென்கொரியாவில் பாரிய நிலச்சரிவு



தென்கொரியாவின் செஜோங் பகுதியில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 20 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதால் அங்கு பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இதனால் தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அங்கு பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. அங்குள்ள நோன்சான், யோங்ஜூ ஆகிய பகுதிகளில் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

இஸ்ரேல்

## பெஞ்சமின் நெதன்யாகு வைத்திய சாலையில் அனுமதி



இஸ்ரேல் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடல்நலக்குறைவால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

73 வயதான பெஞ்சமின் நெதன்யாகு லிகுட் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அலுவலகத்தில் இருந்த போது அவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. இதையடுத்து டெல் அவிவ் நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பெஞ்சமின் நெதன்யாகு உடல்நிலை சீராக இருப்பதாகவும், மருத்துவர்கள் தொடர் கண்காணிப்பில் இருப்பதாகவும், விரைவில் வீடு திரும்புவார் என வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான்பூரி

## தம்பதியைப் பிரித்து வைத்த தக்காளி

### சேர்த்து வைத்தனர் பொலிஸார்



மத்திய பிரதேசத்தில் ஒரு கறியில் கூடுதலாக 2 தக்காளிகளை கணவன் பயன்படுத்தியதால் ஆத்திரமடைந்த மனைவி, கணவனை விட்டுப் பிரிந்த நிலையில், அவரை சமாதானப்படுத்திய பொலிஸார் கணவனுடன் சேர்த்து வைத்தனர்.

நாட்டில் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ள இதனால் தம்பதிகள் பிரிந்த சம்பவம் மத்திய பிரதேசத்தில் நடந்தது.

கடந்த வியாழக் கிழமை ஒரு கறியில் கூடுதலாக 2 தக்காளிகளை கணவன் பயன்படுத்தியதை கண்டு ஆத்திரமடைந்த மனைவி தக்காளி விற்கும் விலையில் 2 தக்காளிகளை வீணடித்து விட்டதாக சத்தம் போட்டு, தனது மகளுடன் வீட்டை விட்டு வெளியேறினார்.

மனைவியை கண்டுபிடித்து தருமாறு, தான்பூரி பொலிஸ் நிலையத்தில் கணவன் முறையிட்டதை அடுத்து, அடுத்த சில மணி நேரத்தில் அவரது சகோதரி வீட்டில் இருப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து அவரை சமாதானப்படுத்திய பொலிஸார், அவரை சனிக்கிழமை கணவனுடன் சேர்த்து வைத்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 17 ஜூலை 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.